


தொண்ணூறுகளின் தொடக்கத்தில், ரஷ்ய அழகிகளைத்தான் ஜிம்னாஸ்டிக்ஸ் மைதானங்களில் பார்த்து உலகம் ரசித்துக்கொண்டிருந்தது. ஒரு மாறுதலுக்கு ஷோகோ அசஹாராவும், அவரது கோஷ்டியும் ரஷ்ய விஞ்ஞானிகளின் புத்திசாலித்தனத்தில் மயங்கிப் போனார்கள். அவர்களது உதவியுடன் எப்படியாவது தங்களால் அணு ஆயுதங்களைத் தயாரித்துவிட முடியும் என்று ஷோகோ மிகவும் நம்பினார்.

பணத்துக்குப் பிரச்னையில்லை. ஒரு வார்த்தை சொன்னால், சொல்லக்கூட வேண்டாம், கண்ணைக் காட்டினால் கொண்டுவந்து கொட்ட கோடிப் பேர் ரெடி. எடுத்துச் செய்ய ஜப்பானிலேயே இன்ஜினீயர்கள் எக்கச்சக்கமாக வெயிட்டிங் லிஸ்டில் இருக்கிறார்கள். வேண்டியது மூளைகள். அது ரஷ்யாவில்தான் மொத்தக் கொள்முதலுக்குக் கிடைக்கும் என்று அவர்கள் நினைத்தார்கள்.

ஏராளமாகச் செலவு செய்து ரஷ்ய விஞ்ஞானிகளையும், அணுசக்தித் துறை அதிகாரிகளையும் ஜப்பானுக்கு வரவழைக்கும் முயற்சிகளைத் தொடங்கினார்கள். மறுபுறம், ஏ.கே .47 ரகத் துப்பாக்கிகள் மற்றும் எம்.ஐ. 17 ரக ராணுவ ஹெலிகாப்டர்கள் ரஷ்யாவிடமிருந்து தொடர்ந்து வாங்கப்பட்டன. வந்து குவிந்த தளவாடங்களையும் ஹெலிகாப்டர்களையும் குவித்து வைக்க, கிராமம் கிராமமாக வளைத்துப் போடும் பணி இன்னொரு புறம் நடந்து கொண்டிருந்தது.

இந்த இடத்தில் உங்களுக்கு ஒரு கேள்வி வரவேண்டும். ஜப்பானிய அரசு, இந்த நேரத்தில் கைக்கு மருதாணி வைத்துக் கொண்டு காயும் வரை காத்திருந்ததா?

என்றால், ஆமாம் என்பதுதான் பதில். உண்மை என்னவெனில், ஓம் ஆசிரமத்தில் என்ன நடக்கிறது என்பது குறித்த விவரங்கள் யூகங்களாகவும் வதந்திகளாகவும்தான் அப்போது வெளியே வந்தனவே தவிர, ஆதாரபூர்வமாக இந்தத் தளவாடங்களை ஒரு போட்டோ எடுத்து யாரும் வெளியே காண்பிக்கவில்லை. ஹெலிகாப்டர்களை பீரோவில் வைத்துப் பூட்ட முடியாது என்பது உண்மைதான். ஆனால், ஷெட்டுகளில் வைத்துப் பூட்டினால் உள்ளே ஹெலிகாப்டர்கள் இருக்கிறதா, எலிகள் இருக்கிறதா என்று யாருக்குத் தெரியும்?

தவிரவும், பாதுகாப்பு ஏற்பாடுகள். ஷோகோ வளைத்துப் போட்ட கிராமப் புறப் பகுதிகள் மிகவும் பின் தங்கிய இடங்கள். மனித நடமாட்டம் அவ்வளவாக இராது.

இத்தனைக்கும் மேலே இருக்கவே இருக்கிறது அந்த டோக்கியோ மெட்ரோபாலிடன் மதச் சட்டம். யார் என்ன செய்துவிட முடியும்? ஷோகோ பகவான் சௌக்கியமாக ஆயுதங்களை வாங்கிக் குவித்துக் கொண்டிருந்தார்.

1992-ம் வருடம் பிறந்ததும் இந்நடவடிக்கைகள் தீவிரமடையத் தொடங்கின. ஓம் ஷின்ரிக்கியோ இயக்கத்தின் 'நிர்வாக அமைச்சர்' என்று அழைக்கப்பட்ட ஹயகாவா (kiyohide Hayakava) என்பவர் பெயரில் ஓர் அறிக்கை வெளியிடப்பட்டது. அறிக்கை என்பது அத்தனை சரியான

சொல்லா என்று தெரியவில்லை. ஒரு மாதிரி பிரகடனம் அது. போர்ப் பிரகடனம் என்று சொல்வது இன்னும் சரியாக இருக்கும். ஜப்பானின் அரசியல் அமைப்புச் சட்டம் மற்றும் சிவில் சட்டங்கள் அனைத்தையும் மாற்ற வேண்டும் என்றும், ஜப்பான் அரசு மக்களுக்கு எதிரானதாக செயல்படுகிறபடியால், அதனை நீக்கிவிட்டு ஒரு புனிதமான அரசாங்கத்தை அமைக்க வேண்டியது மக்களின் கடமை என்றும் உரக்கச் சொன்ன அறிக்கை அது.

ஜப்பானிய அரசாங்கம் முதன்முறையாக ஓம் ஷின்ரிக்கியோ இயக்கத்தைக் குறித்து கேபினட் கூட்டி விவாதித்த தருணமும் அதுதான்.

ஆனால், அப்போதும் பெரிதாக ஒன்றும் செய்ய முடியவில்லை. ஓம் ஷின்ரிக்கியோதான் இப்போது ஓர் அரசியல் கட்சியும் ஆகிவிட்டதே? அரசியல் அமைப்புச் சட்டத்தில் மாற்றம் கொண்டுவர வேண்டுமென்பதோ, அரசாங்கம் ஒழுங்கில்லை என்பதோ எந்தக் கட்சியும் எப்போதும் சொல்லக் கூடியதுதானே? இதனை தேச விரோதச் செயலாகக் கருதுவது எப்படி?

பக்கா திட்டம் அது. எந்தத் தரப்பிலும் நடவடிக்கை என்று யாரும் இறங்கிவிட முடியாதபடிக்கு முன்னேற்பாடுகளைச் செய்து கொண்டு களத்தில் குதித்திருந்தார் நமது வெள்ளைத் தக்காளி.

ஆனால், அதிகாரபூர்வமாக ஒன்றும் செய்யமுடிய வில்லையே தவிர, இவர்கள் ஆபத்தானவர்கள் என்பது பெரும்பாலானோருக்குப் புரிந்துவிட்டது. எனவே, உளவுத்துறையில் ஒரு தனிப்பிரிவு உருவாக்கப்பட்டு, ஓம் இயக்கத்தைக் கவனி என்று உத்தரவிடப்பட்டது.

எந்த முகூர்த்தத்தில் அதனைச் செய்தார்களோ, அப்போது முதல் ஓம் பல விவகாரங்களில் அடுத்தடுத்து அடிபடத் தொடங்கியது. இயக்கத்தின் எதிர்ப்பாளர்கள் என்று யாராவது குறிப்பிடும்படி தெரிந்தால், உடனே தீர்த்துக் கட்டிவிடுவது என்பதை ஒரு மரபாகவே கடைப்பிடிக்கத் தொடங்கினார்கள். ஒன்றிரண்டு வருடங்களில் கிட்டத்தட்ட நூறு கொலைகளுடன் ஓம் இயக்கம் சம்பந்தப்பட்டிருப்பதாகச் செய்திகள் வந்தன.

இது இமேஜை டேமேஜ் பண்ணாதா என்றால், எந்தக் கொலைக்கும் சரியான ஆதாரங்களை போலீஸாரால் காட்ட முடியவில்லை என்பதுதான் பதில். இந்தமாதிரி ஒரு கொலை, அதில் இவர்கள் சம்பந்தப்பட்டிருக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது என்று செய்தி வரும்.

உடனே ஓம் பப்ளிசிடி கம் நல்லுறவுத் துறை 'அமைச்சக'த்திலிருந்து கண்டனமும் மறுப்பும் வரும். அதுவும் கடவுள் பெயரால் வரும். வழக்கம்போல, 'நாங்கள் திறந்த புத்தகம், வந்து படித்துப் பார்த்துக்கொள்' என்று சொல்லிவிடுவார்கள்.

ஆனாலும் எல்லாவற்றுக்கும் முடிவு என்று ஒன்று வந்தாக வேண்டும் இல்லையா? மூன்று முக்கியமான வழக்கு விவகாரங்களில் ஓம் பெயர் நாறத் தொடங்கியது.

முதலாவது, சோகா ககாய் (Soka Gakkai International) என்கிற பவுத்த நிறுவனத்தின் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல்கள் மற்றும் கொலைகள். (மொத்தம் எத்தனை என்று சரியாகத் தெரியவில்லை. எப்படியும் ஒன்பது இருக்கும் என்று பேச்சு. ஆனால், இந்த அமைப்பின் சுப்ரீம் தலைவரைக் கொன்ற வழக்கில் மிகப்பலமாக ஓம் பெயர் அடிபட்டது.)

சோகா ககாய், ஜப்பானில் மிகுந்த செல்வாக்குப் பெற்ற ஒரு நிறுவனம் அல்லது அமைப்பு. பவுத்த சங்கம் என்று புரிவதற்குச் சொல்லலாம். நிச்சிரன் புத்திஸம் என்றொரு பவுத்தப் பிரிவைப் பின்பற்றும் சுமார் ஒன்றரைக் கோடி மக்களின் சரணாலயம். 1930-லிருந்து செயல்பட்டு வரும் அமைப்பு.

இந்த அமைப்பினர் ஓம் ஷின்ரிக்கியோ தொடங்கப்பட்டதிலிருந்தே, 'மவனே இவனை நம்பாதே, ஃப்ராடு' என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். பவுத்தத்தையும் ஹிந்து மதத்தையும் காக்டெயில் செய்வதென்பது எப்படி சாத்தியமே இல்லாத ஒன்று, இது எப்பேர்ப்பட்ட டுபாகூர் என்று வாரம் தவறாமல் தங்கள் வெளியீடுகளில் எழுதிக்கொண்டே இருப்பார்கள். 'ஷோகோ என்கிற தனி நபர் ஓர் ஏமாற்றுப் பேர்வழி, அவரை நம்பி பவுத்தர்கள் மோசம் போகவேண்டாம்' என்பதுதான் இறுதி வேண்டுகோளாக இருக்கும்.

இந்த எழுத்துப் பிரசாரம் மிகவும் தீவிரமடைந்த போது, திடீர் திடீரென்று சோகா ககாய் பெருந்தலைகளில் சிலர் இறந்துபோனார்கள். யாருடைய மரணமும் இயற்கையானதாக இல்லை என்பதுதான் விஷயம்.

ஒருவர் விஷப்பாம்பு கடித்து இறந்தார். இன்னொருவர் ஆக்சிடெண்டில் இறந்தார். வேறொருவர் அடையாளம் தெரியாதவர்களால் சுடப்பட்டு இறந்திருந்தார். மற்றொருவர் என்னத்தையோ கண்ட கரியமில வாயுவை சுவாசித்து செத்துப் போனார்.

என்றால், எப்படி எடுத்துக் கொள்வது? முதல் சந்தேகம், ஓம் இயக்கத்தவர்கள் மீதுதான் வந்தது. ஏனெனில், சோகா ககாய்க்கு எதிரிகள் என்று உலகில் வேறு யாரும் கிடையாது. மிகப்பெரிய அமைப்பு என்பதால், தனிப்பட்ட வழக்கறிஞர் பிரிவு வைத்திருந்தார்கள். எனவே, ஒவ்வொரு மரணத்தையும் தீவிரமாகப் புலன் விசாரணை செய்ய அவர்கள் காவல் துறையையும் அரசையும் வற்புறுத்தினார்கள். எங்கு சுற்றினாலும் சந்தேகத்தின் இறுதி அத்தியாயம் ஓம் மீதே வந்து நின்றது.

இரண்டாவது முக்கியமான வழக்கு, யோஷினோரி கொபாயாஷி (Yoshinori Kobayashi) என்கிற மிகப்பிரபலமான ஜப்பானிய எழுத்தாளரைக் கொல்ல முயன்றது தொடர்பானது. ஆத்தா சத்தியமாக இந்தக் கொலை முயற்சியை ஷோகோவின் தொண்டரடிப் பொடியினர்தான் செய்திருப்பார்கள் என்று தொண்ணூறு சதவிகித ஜப்பானியர்கள் நம்பினார்கள்.

யோஷினோரி அந்த ஊரில் பெரிய ஆள். கொஞ்சம் கன்சர்வேடிவ் ஆசாமி என்றாலும் ரகளையாக நிறைய புத்தகங்கள் எழுதியவர். பெரும்பாலும் அரசியல் நூல்கள். தமது சில புத்தகங்களை அவர் காமிக்ஸ் வடிவிலும் கொண்டு வந்திருக்கிறார். அதில் மிக முக்கியமான ஒரு புத்தகம், 'ஜப்பானுக்கு அமெரிக்காவாலும் ஓம் ஷின்ரிக்கியோவாலும் உண்டாகக் கூடிய ஆபத்து' என்பது.

அதுதான் பிரச்னைக்குக் காரணம்.

அமெரிக்காவின் அடாவடித்தனத்தையும், ஷோகோ அசஹாராவின் கித்தாப்புகளையும் ஒரு நேர்க்கோட்டில் வைத்து எழுதப்பட்ட அந்தப் புத்தகம் ஜப்பானில் நிறைய விற்றது. ஒன்றிரண்டு மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்து அக்கம்பக்கத்து தேசங்களுக்கும் அனுப்பப்பட்டு நன்றாகவே போனது.

இதில் மிகவும் கடுப்பான ஓம் ஷின்ரிக்கியோ தொண்டர்களில் சிலர், தமது வழக்கமான விஷ வாயுத் தாக்குதல் பாணியை அவர் மீதும் நிகழ்த்திவிட முடிவு செய்து, மேலிடத்து அனுமதியெல்லாம் வாங்கிவிட்டார்கள்.

ஆனால் குறி தவறிவிட்டது. எழுத்தாளர் தப்பித்துவிட்டார். மாட்டிக்கொண்டுவிடக்கூடாதே என்பதற்காக, தாக்கவந்தவர்களும் உடனடியாக ஓடிவிட்டபடியால் யாரும் சிக்கவில்லை.

ஆனால், எழுத்தாளர் சும்மா விடுவாரா? அவருக்குத் தெரியாதா, வந்தவர்கள் யார் என்று? உடனே பத்திரிகைகளுக்குச் செய்தி தரப்பட்டது. அவரே சில கட்டுரைகளும் எழுதினார். 'இன்று

நான், நாளை நீ ' என்று அவற்றில் முழங்கினார். ஓம் இயக்கத்தை ஒழித்துக்கட்டவேண்டியதன் அவசியம் பற்றி ஊரெல்லாம் போய்ப் பேசினார். இந்த விவகாரத்தில் ஷோகோவின் பெயர் மிகவும் ரிப்பேர் ஆனது.

மூன்றாவது வழக்கு, The Institute for Research in Human Happiness என்கிற அமைப்பைச் சேர்ந்த ஒருவரைக் கொலை செய்தது. கொபுகு நோ ககாகு என்கிற ஜப்பானியப் பெயர் கொண்ட இந்த அமைப்பும் ஒரு பவுத்த நிறுவனம். இதற்கும், பின்பற்றுவோர் பல்லாயிரக் கணக்கில் உண்டு. இவர்களும் ஓம் ஷின்ரிக்கியோவை எதிர்த்துக் கொண்டிருந்தார்கள்.

போடு ஒரு தலையை!

விஷயம் விவகாரமாகிவிட்டது. மேற்படி மூன்று சம்பவங்களுமே கிட்டத்தட்ட சமகாலத்தில் நடந்தது, மூன்று தரப்புமே ஓம் ஷின்ரிக்கியோவைக் கடுமையாக எதிர்த்துக் கொண்டிருந்தது... மூவரையுமே ஓம் இயக்கத்தினர் குறிபார்த்துக் கொண்டிருந்தது... அனைத்தையும் சேர்த்துப் பார்த்தால், ஒரு விடை கிடைப்பதா பெரிய விஷயம்?

ஜப்பான் முழுவதும் 'ஓமு'க்கான எதிர்ப்பு அலைகள் கணிசமாக எழுந்தன. சரி, போதும் இன்னும் கோலியாடிக் கொண்டிருக்க வேண்டாம் என்று ஷோகோ அசஹாரா முடிவு செய்தார்.

'உடனடியாக அணு ஆயுதங்களைத் தயாரிக்கும் பணிகளை ஆரம்பியுங்கள்' என்று உத்தரவிட்டார். கூடவே, ரசாயன உயிரியல் ஆயுதங்கள் தயாரிப்புப் பணியும் மும்முரமாயின.

எல்லாம் சரி. இதையெல்லாம் பரீட்சித்துப் பார்க்க வேண்டாமா? யுத்தத்துக்கு முன்னால் ஒரு நெட் ப்ராக்டிஸ் கூட இல்லாவிட்டால் எப்படி? ஒன்றிரண்டு சில்லறை முயற்சிகளை எப்படிப் பரீட்சையாக எடுத்துக் கொள்ள முடியும்?

ஆகவே, அவர்கள் முடிவு செய்தார்கள். பெரிய அளவில் ஒரு காரியம். பெரிய காரியம். அதுதான் தொடக்கம். அதன்பின் இடைவெளி கூடாது. சம்ஹார காண்டம் ஆரம்பித்து விட வேண்டும். ஜப்பானில் ஓம் இயக்கத்தவர்களை, அதன் ஆதரவாளர்களைத் தவிர, யாரும் இருக்கக் கூடாது. ஷோகோவைத் தவிர, இன்னொரு தலைவர் கூடாது. அவர்தான் மகான். அவர்தான் மன்னர். அவர்தான் கடவுள். அவர் வைத்ததுதான் சட்டம்.

ஜப்பானை ஆளத் தொடங்கிய பிறகு அடுத்த அடி, அந்தப் பக்கம் இருக்கிற அமெரிக்காவுக்குக் கொடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

ஆரம்பித்தார்கள்.